THE

# VILLAGE SCHOOLMASTER.

# உபாத்தியாயர்.

Vol. I.] JULY, 1887. [No. 2.

## விஷயக் குறிப்பு.

ஜெ. டி. பௌலர் துரை அவர்கள் மூன்று மாசத்துக்கு லீவுவாங்கி கொண்டு இந்த மாதம் 12உ இங்கிலாந்துக்கு போயினார். இவருக்கு பதில் எம். யே. எல். எல். டி. பட்டம் பெற்றவராகிய பிருட்சா துரை அவர்கள் வேலை பார்த்துவருகிறார்.

***

டாக்டர் பிராட்சா துரைக்கு பதில் சென்னபட்டணம் டிப்டி இன்ஸ்பெக்டராகிய ம-ா-ா-ஸ்ரீ விஜயரங்க முதலியார் வேலைபார்த்து வரும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு இப்படி செய்வது நன்மையென்று சந்தோஷப்படினும் காயமாய் வேலை கொடுக்கிறதில்லை என்று விசனப்படுகிறோம்.

***

வித்தைக்கும் எங்களுக்கும் சம்பந்த மில்லை யென்று இன்னங் கொஞ்ச காலத்திற்குள்ளாக கவர்ன்மெண்டார் கையை கழுவிவிடுவார்கள் போலு மிருக்கிறது. கள்ளிக்கோட்டையில் இப்பொழுதிருக்கப்பட்ட கவர்ன்மெண்டு காலேஜை முனிசிபாலிடியின் வசத்தில் விட்டுவிடப்போகிறார்களாம். இது விஷயம் சரியல்லவென்பது எம் கருத்து.

***

ஒரு ஆங்கிலேய பத்திரிகையில் பொறுக்கி யெடுத்த மடையர்கள் ஏழு வகையென சொல்லியிருக்கிறது. அவர்களின் குணாதிசயங்கள் பின் வருமாறும்.

(1.) அண்டைவீட்டுக்காரன் வீடு எரிந்துபோக வேண்டுமென்று தன் வீட்டில் நெருப்புவைக்கும் கோபி.

(2.) பிறர் சுகமாயிருக்கிறார்களென்கிற பொறாமையினால் தான் சுகப்படாதவன்.

(3.) கொஞ்சம் ரூபாய்க்கு ஆசைப்பட்டு தன்னைத் தூக்குப் போடுவதற்கு லோகத்துக்கு அனுமதி கொடுக்கும் கொள்ளைக்காரன்.

(4.) தன் திரேகத்தில் ஏதோ வியாதி இருப்பதாய் தானே எண்ணிக் கொண்டு தனக்கு இம்சையையே தருவித்துக்கொள்வதில் திருப்தி அடைபவன்.

(5.) எரிச்சலினால் தான் தின்கிற சோற்றில் விஷத்தைப் போட்டுக் கொள்பவன்.

(6.) தன் பிள்ளை அண்ணாத்தைமார்களுக்கு விருந்துபண்ணி துர்வினியோகத்தில் பணத்தை செலவழிப்பதற்காக தான் பட்டினிகிடந்து காசு சேர்க்கும் லோபி.

(7.) சமயம் வரும் காலத்தில் பளுகனென்று தன் சத்துரு ரூபிக்கும் படியான வீண் புளுகு பேசுபவன்.

***

ஒரு மனிதன் வயதும் அவன் பிறந்தமாதமும் பின்வருமாறு கண்டுபிடிக்கலாம்.

உன் சிநேகிதன் பிறந்தமாதம் எத்தனையாவதோ அதை இரண்டால் பெருக்கி, ஐந்து கூட்டி, ஐம்பதால் பெருக்கி, வரும் தொகையுடன் அவன் வயதைக்கூட்டிக்கொள்ளச் சொல்லி, அதில் 365 கழித்து, வந்த மீதிக்கு 115 சேர்த்துக்கொள்ளச்சொல்லி வரும் தொகையைத் தெரிந்துகொண்டால் சிநேகிதன் வயதும் அவன் பிறந்த மாதமும் சொல்லிவிடலாம். அவன் வயது 49 யாயும் அவன் ஜனித்த மாதம் பிப்ரவரியாயுமிருக்கட்டும். $2 \times 2 = 4 + 5 = 9 \times 50 = 450, +49 = 499 - 365 = 134, +115 = 249$. அதாவது கடைசி இரண்டு எண்ணும் வயதைக்குறிக்கும். முதல் எண் மாதம். அதாவது 49 வயதும், பிப்ரவரி (2-வது) மாதம்.

## எழுத்து - வாசிப்பு.

(தொடர்ச்சி)

### 3-ம் பாடம்.

பாபா. பாட. பாட்டா.
பாட்டா? பாடப்பா. பாடப்பாட.
பாபா பாட. பாபா பாடப்பாட.
பாட்டா பாடப்பாட.
பாடட்டா? பட்டப்பா.

### 4-ம் பாடம்.

ய. ய். யா.

பாய் பாயப்பாய பாபய்யா
பாட்டா பாயா? பாபா பாய். பட்டய்யா.

## 5-ம் பாடம்.

ர ர் ரா

பார். பார்ப்பார். பாரப்பா. பாபய்யர்
யார். யார் பாய்? பாபய்யர் பாய்.
பாபய்யா பாடப்பா
பாபய்யர் பாடார் ராயர் பார்ப்பார்.

## 6-ம் பாடம்.

ஈ ீ ட் + ஈ = டீ ப் + ஈ = பீ
டீ பீ யீ ரீ.

ஈயார். பீப்பாய்.
பாபய்யர் பீப்பாய் ஈயார்.
ஈரப்பாய். யார் ஈரப்பாய்.

## 7-ம் பாடம்.

ம ம் மா மீ

படம். பாடம். பீடம். மாடம். மட்ட
மாமா. மாமீ. மரம்.
பாயிரம். மாமரம். மட்டப்பாய்.
பயம். பயப்பட. பயப்படமாட்டாய். பம்பரம்.

## 8-ம் பாடம்.

பாபா பம்பரமாட பாரம்மா.
மரம் பாரம்மா.
யார் மரமப்பா?
மாமா மரமம்மா.
பாய் ஈரமா?
மாமா மாமரம் பார்.
மாமரம் பார்மாமீ!
யார் படம்?
பாட்டா படமம்மா.
யார் பாடமாட்டார்?
மாமாபாட, மரமாட, பாம்பாட பாட்டா பயப்பட்டார்.
மாமா பாடமாட்டார்.

## 9-ம் பாடம்.

ழ ழ் ழா ழீ

பழம். பாழ். பாழாய்.
மாம்பழம். பாரம்.
மாமரம் பாரய்யா.
மாம்பழம் பாரம்மா.
மாம்பழம் பாரமாய் மாமரமாட பட்டம்மா பார்.

## 10-ம் பாடம்.

ச ச் சா சீ

சாபம். சட்டம். சீழ். பாசம்.
ஈச்சம்பாய். ஈசா. ஈச்சம்பழம்.
சப்பரம். சரம். சமம். சாயம்.
ரசம். மாம்பழரசம். ஈச்சமரம்.
சாயப்பாய். ஈரமா.
பார் பரம். ஈசா.
ஓசீ சீழ்பார்.

## 11-ம் பாடம்.

க க் கா கீ

காக்காய். கபடம். கசப்பாய்.
கார்ப்பாய். காடா?
காக்காய் காட்டப்பா? கம்பம்.
மாம்பழம் கசப்பா?
கார்ப்பீர் பரமையா.
கட்டடம் பழசாம்.
காயம் கசப்பாம்.
மரம் கீழ் பழம்பார்.

## 12-ம் பாடம்.

த த் தா தீ

தாதா. தீர்த்தம். தாய். தாடார்.
தாயாரம்மா, தீபம். தடாகம்.
பத்தா? பார்த்தார். பத்தாய்.
பத்தர். பக்தர். மத்தா?
கத்த. கப்பம்.
தம்பீ காக்காய் கத்தப்பார்.
தம்பீ காகம்பார்.

மரம்கிழ் காகம் பத்தாம்.
தாயாரம்மா! கட்டடம் கிழ்தீபம் பார்த்தாயா.

## 13-ம் பாடம்.

ந ந் நா நீ

| | | | | |
|---|---|---|---|---|
| நாய். | நார். | நாமம். | நரம். | நயம். |
| நீர். | மந்தம். | நீந்த. | நகம். | நாகம். |

நாடகம்

நாம் பார்த்த நாயா.
ஈயம் நயமாம்?
மாம்பழம் நயமா?
மாம்பழம் நயமாம்.
நார் ஈரமா?
நாய் தடாகம் நீந்தப்பார்.
நீ நாடகம் பார்த்தாயா;
நீர் நாடகம் பார்த்தீரா.

## 14-ம் பாடம்.

ங ங் ஙா ஙீ

| | | |
|---|---|---|
| கங்கா. | பாங்காய். | பங்கசம். |
| வங்கம். | தங்கம். | மாங்காய். |

தங்கம் நீ மாங்காய்ப் பார்த்தாயா?
மாங்காயா மாம்பழமா?

## 15-ம் பாடம்.

எ ெ

டெ பெ யெ ரெ மெ ழெ செ
கெ தெ நெ

தங்கம் தாயார் பெயரென்ன.
எந்த தங்கம்?
கெட்ட நாய் எங்கே.
செம்மரம், நெய், செம்பழம்.
மரம் எட்டாதா.
பழம் எடடா?
தடாகம் நீந்தத் தகாத நாய்.
தங்கம் தெப்பமாட் பார்த்தாயா?
மகா தடாகமா?

## 16-ம் பாடம்.

எ ே

டே பே யே ரே மே ழே சே

கே தே நே

| | | | | |
|---|---|---|---|---|
| கேட்ட. | கேட்கத்தகாத. | பேய், | அய்யே. | |
| மேகம். | சேர். | தேர். | நேர். | தேங்காய். |
| சேர்ந்த. | சேர்ந்தாய். | | | |

பேயே! நீ எங்க தங்கத்தைச் சேர்ந்தாயா?
தேங்காய்கேட்ட மாமா தடாகம் சேர்ந்தார்.

## 17-ம் பாடம்.

ஞ ஞ் ஞா ஞீ ஞெ ஞே

மஞ்சப்பாய் மஞ்சத்தண்ணீர்.
தஞ்சமாநகர் நலம்.
தங்கம் கேட்டமாங்காய்ப் பத்தா?
பாபா பழம் தா, என கேட்டதா?
மாமா பழந்தா என, வாய் காட்ட,
மாமா மாம்பழம் ஈய்ந்தார்.
மாமீ! காஞ்சி நகரம் பார்த்தாயா?

## 18-ம் பாடம்.

உ | ு —ா ு

டு பு யு ரு மி மு சு கு

து நு நு ஞு

| | | | | |
|---|---|---|---|---|
| உடுப்பு | முழுச்சிப்பு | சிப்பு | | |
| சுக்கு | துருசு | துத்தம் | | |
| பசு | காடு | பாடு | பட்டு | செய்து |
| உழு | உழுது | பழுது | நெய்து | |

பாட புத்தகம்

முழுதும், காட்டு, காது, நுட்பம், காப்பு கமுகு, பாக்கு, முருங்கக்காய், முருங்கமரம் ஈச்சங்காய், தேங்காய், படுத்து, உடுத்து, சிப்பு, செய்.

பசுநெய் சாப்பாட்டுக்கும் மருந்துக்கும் எடுத்தது.
படம் எடுத்துக்காட்டு.
எட்டு மாம்பழம், எட்டு பாக்கு, எழு முருங்கக்காய் காட்டு.
பாட்டு பாடப்பாட பாம்பு படமாட்டும்.
பங்கசம், காப்புதா.
பாக்குமரம் உயரமாயிருக்கும்.
பசுமாடு எங்கே.

## 19-ம் பாடம்.

அ ஆ

| | | | |
|---|---|---|---|
| அது. | ஆடு | | |
| அடுப்பு. | ஆத்துமா. | அரசி. | அம்மா. |
| அப்பா. | அக்கா. | அய்யா. | ஆயா. |
| மாடு. | ஆடுமாடு. | | |
| அஞ்சு. | பஞ்சு. | | |

பாரதம் எடுத்துப்பார்த்தாயா.

| | |
|---|---|
| ஆடுமாடு. | அஞ்சு. |
| அக்கா. | பஞ்சு தா. |
| அப்பா. | ஆயா எங்கே. |

## 20-ம் பாடம்.

டி பி யி ரி மி ழி சி கி தி நி ஙி ஞி

| | | | | |
|---|---|---|---|---|
| இடி. | அடி. | அடிக்கடி. | மடிபிடி. | |
| பித்தம். | மயிர். | சிமிழ். | | |
| கிட்ட. | காடி. | கத்தி. | அம்மி. | பசி. |
| தாகம். | பிசாசு. | புரி. | நதி. | |
| கங்காநதி. | இடுப்பு. | அப்பய்யா. | | |

கரடிபாய ரங்கம்பயப்பட்டது.
பித்தம் பிடித்ததா.
இடி இடித்து வீடு இடிந்தது.
மரஞ் சாய்ந்தது.
தாகமெடுத்து, நீர்குடிக்க தடாகம்சேர்ந்தான்.
நாடகம் பார்க்கப்பார்க்க அழகாயிருக்குமாம்.
கங்காநதியில் தாகந்திர மதுரமானசலம் குடிப்பார்.
கரும்புசாப்பிட ருசியாயிருக்கும்.
கருப்பஞ்சார் மதுரமாயிருக்கும்.

## 21-ம் பாடம்.

வ் வ வா வி வீ வு வெ வே

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா. | வரகு. | வரட்டி. | வட்டம். | | |
| வசம்பு. | வேப்பமரம். | வேப்பங்காய். | | | |
| வழக்கு. | வடக்கு. | வாய். | | | |
| வாக்கு. | வாது. | வம்பு. | வீம்பு. | வெப்பம். | வேர். |

மரவேர்.
வாது என்ன ?
வரட்டி வாங்கு.
வடக்கு வழி.
வனம்பார்த்து வந்துசேரும்.

உபாத்தியாயா.

வாக்குதத்தம் செய்யாதே.
சத்தியம் செய்யாதே.
வழக்கு கூடாது.
வேப்பமரம் வெப்பந்தாங்கும்.
வடக்குதிக்காய்ப் பார்த்தார்.

## 22-ம் பாடம்.

ல் ல லா லி லீ லு லெ லே

| | | | | |
|---|---|---|---|---|
| வெல்லம். | வால். | லாபம். | பல்லி. | பல்லு. |
| கல். | செல்லு. | கால். | ஆலங்காய். | |
| ஆலமரம். | செலவு. | விவரம். | | |
| இராமசாமி. | இராமலிங்கம். | புலி. | வேலி. | தாலி. |

வெல்லம் வாய்க்கு தித்திப்பாயிருக்கும்.
அம்மா பல்லி இடதுபுசத்தில் விழுந்தது அது என்ன?
அப்படி விழுந்தால் நல்லது.
வலதுபுசத்தில் விழுவது நல்லதல்ல.
அப்பா! சுவாமிக்கு உச்சவம்செய்தீரே,
அதில் உமக்கு எவ்வளவுசெலவு?
எழுபது ரூபாய் செலவாச்சுதம்மா.
சுவாமிக்கு பூஅலங்காம்அழகாயிருந்ததா.
அம்மா சுவாமி வீதியில் வரும்சமயத்தில் நீ எவ்விடத்திலிருந்தாய்.
அப்பா! நான் அப்போதுபார்த்ததில்லை.

## 23-ம் பாடம்.

ள் ள ளா ளி ளீ ளு ளெ ளே

| | | | |
|---|---|---|---|
| பள்ளம். | வாள். | உள்ளே. | உளி. |
| கள்ளம். | குள்ளம். | குள்ளநரி. | பத்திரகாளி. |
| வெள்ளம். | வள்ளி. | வெள்ளி. | தெள்ளி. |
| களம். | வாளி. | முள்ளு. | கேளிர். |

பள்ளத்தில் நீர் அகப்படும்.
அவன் நாட்டுக்குவந்தாள்.
உள்ளே உளிஇருந்தால் எடுத்துவா.
இங்கே இப்படி யார்செய்தது.
பழகப்பழகப் பாலும் புளிக்கும்.
கூழ்குடித்தால் பசிநீங்கும்.
கள்ளு சாராயம் குடிப்பதுசரியல்ல.
இராத்திரியில் பால் சாப்பிடவேண்டும்.
பழம் நழுகிப்பாலில் விழுந்தது.
உழுதுபயிர்செய்து சீவனஞ்செய்தல் நலம்.

(இன்னும் வரும்.)

## மனோதத்துவம்.

இவ்விஷயத்தைப்பற்றி மறு சஞ்சிகையில் விசேஷமாய் சொல்லும்படி இச்சஞ்சிகையில் ஒன்றும் சொல்லாமல் விட்டோம்.

## கவனிப்புகள்.

உபாத்தியாயர் பாடத்தை முன்பாக வீட்டில் ஒருதடவைப் பார்த்து அதை பிள்ளைகளுக்கு இப்படி கற்பிப்பது என்று தன்மனதிலேயோ அல்லது காகிதத்திலேயோ ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது. அதாவது பாடத்தின் பிரதி சங்கதியும் நன்றாய் கவனிக்கக்கூடியதாய் ஒழுங்குபடுத்தவேண்டும்.

தன் சக்தியும் பிள்ளைகளின் சக்தியும் ஒன்றென்று நினைக்கக்கூடாது. சிலர் தாங்கள் ஒருதரம் படித்து சுலபத்தில் தெரிந்துகொள்ளும் சங்கதியை பிள்ளைகளும் தெரிந்துக்கொள்வார்களென் றெண்ணுவார்கள். அப்படிக்கில்லாமல் பாடத்தின் விஷயம் வகுப்பின் சக்திக்கு ஏற்றதாயிருக்கவேண்டும்.

சிலர் பூகோள பாடத்தில் ராவணன் கதையும் கணக்கில் தென்னால் இராமன் கதையும் சொல்லி பொழுதைப்போக்கினால் போதுமென் றெண்ணுவார்கள். ஏதோ ஒருவிஷயம் கற்பிப்பது என்று பூகோளபாடத்தில் இதர பாடங்களையும் சம்பந்தமில்லாத விஷயங்களையும் கலக்கக்கூடாது. அதாவது பாடத்திற்குப் பொருந்தாமலும் சம்பந்தப்படாமலுமிருக்கிற விஷயங்கள் பாடத்தில் கலக்கக்கூடாது.

சிலர் விஷயங்களைத் தெளிவுபடுத்தும்போது, இரைச்சல் போட்டு, கா, கூ வென்று கத்தின போதிலும் கடைசியாய் காரியத்தில் ஒரு பிரயோஜனமுமில்லாமல் போகும். சுலபமான பதங்களைக்கொண்டு அப்பிள்ளைகளுக்கெப்படி போதிக்கவேண்டுமோ அப்படி செய்தால் தான் அவர்களுக்கு ஏதாவது தெரியும். தாங்கள் சரியாய்க் கற்றுக்கொடுத்தோமென்று தங்கள் குற்றத்தை யறியாமல் "தொண்டைபோக கற்பித்தும் இக்களிமண் தலையில் புகவில்லையே" யென்று கழியையோ அல்லது புஸ்தக கட்டையையோ எடுத்து தலைமேல் அடிக்கப்போவார்கள். இவர்களுக்கு அப்படி கோபம் வரும்போதெல்லாம் சற்று நிதானித்து தப்பிதம் நம்முடையதா மற்றவர்களுடையதா என்று நிதானித்தல் நன்மை.

மூடிபோட்ட பாத்திரத்தில் நீர்விடுவதுபோல, கிரஹிக்கச் சக்தியற்ற பிள்ளைகளுக்குப் பிரசிங்கப்பதினாலாவதென்ன? தான் கற்பித்த ஒவ்வொருவிஷயத்தையும் பிள்ளைகள் சரியாய் அறிந்தார்களாவென்று பார்க்கவேண்

டும், அப்படித் தெரிந்துகொள்ள பிரதி வியாக்கியானத்தின் பிறகு கேள்வி கேட்டல் வேண்டும்.

எம்முடைய சந்தாதார்களுக் குண்டாகும் சந்தியங்களை எமக்குத் தெரிவித்தால் எம்மால் கூடியவரைக்கும் விடை கொடுக்கப் பிரயத்தினப்படுவோம். நார்மல்ஸ்கூல் உபாத்தியாயர்கள் தங்கள் வேலையை நடத்திவருகையில் அனேக புதிதான விஷயங்களைக் கண்டுபிடிக்கக்கூடும். அவைகளையெல்லாம் குறித்து இப்பத்திரிகையின் மூலமாய் வெளியிட மற்றவர்களும் அறிந்து பிரயோஜனப்படுவார்கள். தங்கள் தங்கள் வேலையைப்பற்றி அடிக்கடி யோசித்து அனேக விஷயங்களைக் கிரஹிப்பதே மேன்மையான கடமை.

———:o:———

## முதல் ஸ்டாண்டர்ட்டுக்குக் குறித்திருக்கிற பாடம்.

(1.) நூறு வரைக்கும் முன்னும் பின்னுமாய் எண்ணுதல்.

(2.) பத்து, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, இடை விட்டு எண்ணுதல்.

(3.) ஒன்று முதல் நூறு முதலாயுள்ள எண்களை வாசித்தல், எழுதல், பிரித்தல்.

(4.) மொத்தம் நூறுக்கு மேற்படாமல் இரண்டு வரிசைக்குள் கூட்டல்.

(5.) பெருக்கல் வாய்பாடு நான்கு பனிரண்டுவரைக்குங் கற்பித்தல்.

(6.) எட்டணுவுக்கு மேற்படாமல் நாணயக்கூட்டல் மனக்கணக்காய் கற்பித்தல் முதலானவையாம்.

முன்பு பத்து வரைக்கும் கற்பித்துப் பிறகு ஒன்று சேர்த்து வேறு வார்த்தையில்லாமையால் பத்தும் ஒன்றும் பதினொன்று என்று, அப்படியே சொன்னோம். மறுபடியும் ஒன்று சேர்த்து, பத்தும் இரண்டும் பனிரண்டு எனவும், மறுபடியும் ஒறு குண்டுசேர்த்தால் பத்தோடு மூன்று சேர்த்தால்-பதின் மூன்று எனவும், இப்படி ஒன்றுகள் சேர்த்துக்கொண்டே,

| | | |
|---|---|---|
| பத்தும் | நான்கும் | பதினான்கு |
| பத்தும் | ஐந்தும் | பதினைந்து |
| பத்தும் | ஆறும் | பதினாறு |
| பத்தும் | ஏழும் | பதினேழு |
| பத்தும் | எட்டும் | பதினெட்டு |
| பத்தும் | ஒன்பதும் | பத்தொன்பது |
| பத்தும் | பத்தும் | இருபத்து அல்லது இருபது |

என்றிம்மாதிரியாய் பலவஸ்துக்களைக்கொண்டு கற்பிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| பிறகு | மூன்று | பத்து | முப்பது |
| | நான்கு | பத்து | நாற்பது |
| | ஐந்து | பத்து | ஐம்பது |
| | ஆறு | பத்து | அறுபது |
| | ஏழு | பத்து | எழுபது |
| | எட்டு | பத்து | எண்பது |
| | ஒன்பது | பத்து | தொண்ணூறு |
| | பத்து | பத்து | நூறு. |

இம்மாதிரியாய் ஒன்பது வரைக்கும் ஒன்று ஒன்றா யெண்ணிக்கொண்டு போய் பத்தான பிற்பாடு பத்து பத்தா யெண்ணவும் பத்துக்கு குறைந்திருந்தால் இத்தனை பத்தும் இத்தனை ஒன்றும் என சொல்லிவிக்கவும்.

பின் வருபவைகளை பத்தாகவும் ஒன்றாகவும் பிரிக்கவும்.

நாற்பத்தி எட்டு, முப்பத்திரண்டு, ஐம்பது, எழுபத்தி நான்கு, இருபத்தி யாறு, நாற்பத்தி எட்டு, பதினாறு, ஐம்பத்தி ஏழு, எண்பத்திநாலு, தொண்ணூறு.

நூறு முதற்கொண்டு ஒன்றின் கழித்தலாகிய தலைகீழாய் எண்ணக் கற்பிக்கவும்.

நூறு-பத்து பத்தாகையால் (அதாவது ஒன்பது பத்தும் ஒரு பத்து) பத்தில் ஒன்று போனால் ஒன்பது, ஒன்பது பத்து தொண்ணூறு, தொண்ணூறும் ஒன்பதும் தொண்ணூற்றொன்பது எனவும். இம்மாதிரியாய் ஒவ்வொரு விஷயத்தையும் தெரிவிக்கவும்.

பிறகு பத்து இடையில் விட்டு எண்ணக் கற்பிக்கவும் இது முன்வரும் சங்கதியால் தெரிந்திருக்கலாம். ஒரு பத்து அல்லது பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு, நூறு.

உம். இருபதும் முப்பதும் எவ்வளவு? இருபது இருபத்து முப்பது மூன்று பத்து இருபத்தும் மூன்று பத்தும் ஐந்து பத்து அல்லது ஐம்பது.

அம். இருபதும் ஐம்பதும் எவ்வளவு? முப்பதும் நாற்பதும் எவ்வளவு? முப்பதும் ஐம்பதுமெவ்வளவு? இருபதும் எழுபதும் எவ்வளவு? அறுபதும் இருபதும் எவ்வளவு?

பிறகு இரண்டு இடையில் விட்டு எண்ணவும்.

பனிரண்டும் இரண்டும் பதினான்கு.

பனிரண்டு பத்தும் இரண்டு. இதோடு இரண்டு சேர்க்க பத்தும் நான்கும் பதினான்கு எனவும், பதினான்கும் இரண்டும் பதினாறு, பதினாறும் இரண்

டும் பதினெட்டு, பதினெட்டும் இரண்டும் இருபது, பதினெட்டு-பத்தும் எட்டும், இரண்டுசேர்க்க, பத்தும் பத்தும், இருபது, இம்மாதிரியாய் நூறு வரைக்கும் கற்பிக்கவும்.

## மூன்று இடையில் விட்டு எண்ணக் கற்பிக்கவும்.

பனிரண்டும், மூன்றும் பதினைந்து.

பனிரண்டு-பத்தும் இரண்டும், இதோடு மூன்று சேர்க்க பத்தும் ஐந்தும் பதினைந்து, பதினைந்தும் மூன்றும் பதினெட்டு, பதினெட்டும் மூன்றும் இருபத்தொன்று.

பதினெட்டு-பத்தும் எட்டும். இதோடு மூன்று சேர்க்க பத்தும் பத்தும் ஒன்று அதாவது இருபத்தி ஒன்று ஆகும்.

இம்மாதிரியாய் நூறு வரைக்கும் கற்பிக்கவும்.

## பிறகு நான்கு இடையில் விட்டு எண்ணவும்.

பனிரண்டும் நான்கும் பதினாறு, பதினாறும் நான்கும் இருபது, இருபதும் நான்கும் இருபத்திநான்கு இம்மாதிரியாய் நூறுவரைக்கும் கற்பிக்கவும்.

## பிறகு ஐந்தைந்து விட்டு எண்ணவும்.

பத்தும் ஐந்து பதினைந்து பதினைந்து ஐந்தும் இருபது இம்மாதிரியாய் நூறு வரைக்கும் எண்ணவும்.

இப்படி பலவிதமாய் பலதரம் செய்வதால் பிள்ளைகள் எப்பேர்க்கொத்தையும் கூட்ட நன்றாய்க் கற்கிறார்கள்.

## அப்பியாசம்.

(1.) கூட்டுக மூன்றும், ஐந்தும், ஐந்தும், நான்கும், பத்தும், எட்டும், எட்டும், ஐந்து, ஒன்றும் ஐந்தும், ஆறும் ஏழும், எட்டும் ஒன்பதும், பதின்மூன்றும் ஐந்தும்.

இம்மாதிரியாய் உபாத்தியாயர் அனேகம் செய்துகொள்ளலாம்.

—:o:—

# கிண்டர்கார்டன்.

## ப்ரோபெல் சரித்திரம்.

யாம் முன் பத்திரிகையில் ப்ரோபெல் என்னும், கிண்டர் கார்டனுக்கு ஆதி கர்த்தாவாயிருக்கப்பட்டவரின் சரித்திரத்தைக் கூறுவதாகச் சொல்லியிருந்தோம். அதை இப்போது சுருக்கமாய்ச் சொல்லி முடிக்க முயல்வோம்.

ப்ரெடரிக் ப்ரோபெல் என்பவர் 1782 வருஷத்தில், தூரிங்கியன் காட்டினிலிருக்கும் ஓபெர் வியிஸ்பாக் என்னும் குக்கிராமத்தில் பிறந்தவர். பாலியமாயிருக்கும்போதே அவர் படிப்புக்கு அனேக இடையூறுகள் சம்பவித்தன. பாலியத்திலேயே தன் தாயாரை இழந்து, தகப்பனாலாவது, மற்றுந்தாயாலாவது சரியாய் பாராமரிக்கப்படவில்லை. ப்ரோபெலின் அம்மான் இவர் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டபோதிலும், இவருடைய உபாத்தியாயர்கள் அவர் சுபாவத்தை அறியாமலே, ஒன்றுக்கும் உதவமாட்டாதவனென்று தீர்மானித்தார்கள். இப்படி இவர் பாலியத்தில் பள்ளிக்கூடத்தில் படித்து பிரயோஜனப்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு படிப்புக்கு உதவமாட்டாரென்பதாக ஒரு காட்டு விசாரணைக் கர்த்தரிடத்தில் வேலைக்கு அமர்த்தினார்கள். அவ்விடத்தில் இவர் செடிகளிடத்திலும் மரங்களிடத்திலும் எப்போதும் வேலையாயிருந்து தானாய் அனேக சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைக் கற்றார்

இப்படியான பிறகு, சாஸ்திர விஷயங்களை பூர்த்தியாய் விசாரிக்கவேண்டுமென்கிற ஆசையினால், தன் எஜமானன் உத்தரவைப்பெற்று ஜீனா ஸர்வகலாசாலையைச் சேர்ந்தார். அவ்விடத்து போதனை இவருக்கு சரிப்படவில்லையாயினும் இக்காரியத்தினால் 30 ஷில்லிங் கடன்பட்டு ஒன்பது வாரம் சிறைச்சாலையிலிருக்கும்படியாய் நேரிட்டது.

இதன் பிறகு பயிரிடும் வேலையைத் தொடர்ந்து, அதை செய்துக்கொண்டிருக்க இவர் தகப்பனார் இறந்துபோனார். அப்பொழுது இவருக்கு வயது இருபதாயினும் தன் ஜீவனத்துக்குத்தானே தேடும்படி நேரிட்டது.* இது முதற்கொண்டு மூன்றரை வருஷம் வரைக்கும் அனேக வேலைகளிலிருந்த போதிலும், அவைகளிலெதிலும் கொஞ்சமேனும் விருப்பமில்லாதவராயிருந்தார். தன்னை ஏதோ ஜனோபகாரமான, ஒரு பெரிய காரியத்தைச்செய்ய பகவான் சிருஷ்டித்திருக்கிறார் என்று தன் மனதிற்கு அடிக்கடி தானாய்ப்பட்டபோதிலும் அது இன்னதென்று முன்னால் அவருக்கு தெரிந்ததில்லை.

சிலநாள் சென்றபின்பு இவர் சிற்பி சாஸ்திரம் கற்றுக்கொண்டு அவ்வேலையை செய்துகொண்டிருக்கும் சமயத்தில், அவ்விடத்திலிருக்கும் உபாத்தியாயரில் ஒருவர் இவர் உபாத்தியாயர் வேலைக்குத் தகுந்தவரென்று யோசித்து தனது பாடசாலையில் ஒருவேலை கொடுப்பித்தார். இதில் இரண்டு வருஷம் மிக உச்சாகத்தோடு கற்பித்துவந்து பிறகு வேறுமூன்று பிள்ளைகளுக்கு மாத்திரம் கற்பிக்கும்படி ஏற்பாடாய், அவர்களையும் அழைத்துக்கொண்டு பெஸ்டிலாட்ஸியினிடம் சுவிட்ஜர்லாண்டுக்குப்போய்ச்சேர்ந்தார்.

(இன்னும்வரும்)

——:0:——

## ஒரே உபாத்தியாயர் இரண்டு மூன்று வகுப்பை நடத்த முறை.

(முன் தொடர்ச்சி)

பிள்ளைகளின் மனோக்கருவிகளின் சக்திக்குத் தகுந்தாற்போல், அவர்களுக்குப் படிப்பிக்கவேண்டுமேயொழிய, நம்மிஷ்டத்தைப்போல் எத்தனை காரியமாயினும் கற்பிக்கத் தலைப்படக்கூடாது. அப்படி செயின், வித்தி

* இவ்விஷயம் நம்மவரில் ஒரு ஆச்சரியமல்ல.

யாப்பியாசம் என்கிற மனோக்கருவிகளை பழக்கி அவைகளைப் பலப்படுத்துகிறேருமென்கிற பேரை வைத்துக்கொண்டு, அதற்கு நேர் எதிராகிய மனோக்கருவிகளை துர்ப்பலப்படுத்தும் வேலையை செய்வதாகும். சில நாளைக்கு முன்பு பின்வருமாறு 1886-ஹு மேமீ 20உ டைரெக்டர் பொரோஸீடிங்ஸில் பிள்ளைகளின் வயதுக்குத் தகுந்தாற்போல வேலையிடலாமென்று பிரசுரப்படுத்தியிருக்கிறது.

| வயது. | மணி. | | | Sleep. நித்திரை. |
|---|---|---|---|---|
| | Exercise. முயற்சி. | Work. வேலை. | Leisure. அவகாசம். | |
| 7 | 8 | 2 | 4 | 10 |
| 8 | 8 | 2 | 4 | 10 |
| 9 | 8 | 3 | 4 | 9 |
| 10 | 8 | 4 | 4 | 8 |
| 11 | 7 | 5 | 4 | 8 |
| 12 | 6 | 6 | 4 | 8 |
| 13 | 5 | 7 | 4 | 8 |
| 14 | 5 | 8 | 4 | 7 |
| 15 | 4 | 9 | 4 | 7 |

முன்பு ஒவ்வொரு வகுப்புக்குக் கால அட்டவணை ஏற்படுத்தி பிறகு உபாத்தியாயர் கற்பிக்கவேண்டிய வழியை தெரிவிப்போம்.

——:o:——

## இன்பெண்டு ஸ்டாண்டர்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| குறிக்க ... ... ... ... ... | ,, | 5 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 20 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 15 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | ,, | 30 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |

| | | |
|---|---|---|
| ஆப்ஜெக்ட் லெஸன் ஆகுபேஷன் அல்லது ஆக்ஷன் பாட்டுகள் ... ... ... ... ... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 5 |

ஆக காலை $1\frac{1}{2}$-மணி மாலை $1\frac{1}{4}$-மணி மொத்தம் $2\frac{3}{4}$-மணிக்கு, பாடத்தில் செலவழிக்க வேண்டிய காலம் $1\frac{1}{2}$-மணி.

## முதல் ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| குளிக்க ... ... ... ... ... | ,, | 5 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 35 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 20 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | ,, | 40 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| ஆப்ஜெக்ட் லெஸன், ஆகுபேஷன் ஆக்ஷன் ஸாங்கு... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |

ஆக காலை $1\frac{1}{2}$-மணி மாலை $1\frac{1}{2}$-மணி மொத்தம் 3-மணிக்கு பாடத்தில் செலவழிக்கவேண்டிய காலம் 2-மணி நேரம்.

## இரண்டாவது ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

### காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| பாட்டு ... ... ... ... ... | ,, | 5 |
| வாசிப்பு ... ... ... ... ... | ,, | 45 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| எழுதல் ... ... ... ... ... | ,, | 20 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 10 |
| சொல்லும் ... ... ... ... ... | ,, | 20 |

### மாலை.

| | | |
|---|---|---|
| கணக்கு ... ... ... ... ... | ,, | 45 |
| விளையாட்டு ... ... ... ... ... | ,, | 15 |
| ஆப் ஜெக்ட் ஆகுபேஷன் பூகோளம் ... ... | ,, | 30 |
| பாட்டு ... ... ... ... ... | ,, | 10 |

ஆக காலை 2-மணி மாலை 1—40. மொத்தம் 3—40-மணிக்கு பாடத்திற்கு மாத்திரம் 2—40-மணி காலம்.

இம்மூன்று வகுப்பையும் காலை 7-மணிமுதல் ஒன்பது மணிவரைக்கும், மாலை 4-மணிமுதல் 5—30-மணி வரைக்கும் கற்பிக்கவேண்டும்.

கற்பிக்கவேண்டியது முதல் இரண்டு வகுப்பேயானால் மேற்சொல்லிய காலத்தில் இரண்டுவகுப்பையும் தானும் நடத்தலாம்.

### மூன்றாவது ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| இங்கிலீஷ் வாசிப்பு ... | ,, | 45 |
| எழுதல் சொல்லுவதெழுதல் | ,, | 15 |
| விளையாட்டு | ,, | 10 |
| நீதிமஞ்சரி, பூகோளம் | ,, | 30 |
| சித்திரம், பாட்டு | ,, | 20 |

மாலை.

| | | |
|---|---|---|
| தமிழ் வாசகம் | ,, | 45 |
| சொல்வதெழுதல், எழுதல் | ,, | 15 |
| கணக்கு ... | 1 | ,, |
| ஆப்ஜெக்ட் லெஸன் | ,, | 30 |

ஆக காலை 2-மணி மாலை 2½-மணிக்கு பாடம் 4-மணி.

### நான்காவது ஸ்டாண்டர்ட்டுக்கு கால அட்டவணை.

காலை.

| பிள்ளைகள் வரும்போது அடெண்டன்ஸ். | மணி. | நிமி. |
|---|---|---|
| இங்கிலீஷ் வாசகம் ... | ,, | 45 |
| ஆப்ஜக்ட் லெஸன் பூகோளம் | ,, | 30 |
| தமிழ் இங்கிலீஷ் இலக்கணம் ... | ,, | 20 |
| இங்கிலீஷ் எழுதல் சொல்லுவதெழுதல் | ,, | 20 |
| சரித்திரம் | ,, | 5 |

மாலை.

| | | |
|---|---|---|
| நீதிமஞ்சரி | ,, | 45 |
| எழுதல் சொல்லுவ தெழுதல் | ,, | 30 |
| கணக்கு ... | 1 | ,, |
| சித்திரம், பாட்டு | ,, | 15 |

ஆக காலை 2-மணி மாலை 2½-மணி ஆக மொத்தம் 4½ மணி.

மறு சஞ்சிகையில் படிப்பிக்கவேண்டிய ஏற்பாட்டைப்பற்றிச் சொல்லுவோம்.